

சிவகங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 2 கோடியில் புதுப்பிக்கப்பட்ட பேருந்து நிலையத்தினை கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார். உடன் கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி. சிவகங்கை நகர் மன்றத் தலைவர் சி.எம்.துரை.ஆனந்த், மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற காணொளி காட்சி வாயிலான மாவட்டச் செயலாளர்கள் சிறப்பு கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் தொகுதி பொறுப்பாளர்கள் டாக்டர் திலீப் ராஜ கண்ணப்பன், சுப.த.சம்பத், ஆனந்த், விஜய கதிரவன் உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் செயலாளர்கள் பங்கேற்றனர்.

### தொகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையின் அடிப்படையில்

# கிணத்துக்கடவு - பொள்ளாச்சி ரயில் நிலையங்களை சேலம் மண்டலத்திற்கு மாற்றுக!

## மக்களவையில் உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி வலியுறுத்தல்!

கோவை, டிச. 10 -

பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி தொகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையின் அடிப்படையில் கிணத்துக்கடவு மற்றும் பொள்ளாச்சி ரயில் நிலையங்களை சேலம் மண்டலத்திற்கு மாற்றுவது குறித்து மக்களவையில் வலியுறுத்தினார்.



கிணத்துக்கடவு மற்றும் பொள்ளாச்சி ரயில் நிலையங்களை பாலக்காடு மண்டலத்திலிருந்து சேலம் மண்டலத்துக்கு மாற்றுவது தொடர்பாக ஒன்றிய அரசு மனுக்கள் பெற்றுள்ளதா? பெற்றிருந்தால் அதற்கான விவரங்கள் என்ன? பெறவில்லை என்றால் அதற்கான நடவடிக்கை என்ன?

தற்போதைய மண்டல அமைப்பு கட்டமைப்பு மேம்பாட்டிலும் பயணிகள் வசதிகளிலும் தாமதத்தை ஏற்படுத்துகிறது என்பதை அரசு அறிந்திருக்கிறதா? அறிந்திருந்தால் அதன் விவரங்கள் என்ன?

மேற்கண்ட கோரிக்கைக்கான சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொள்வது, மேலும் தமிழ்நாடுலும் தமிழ்நாடு அரசுடன் ஆலோசனை நடத்துவது போன்றவற்றை ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ளதா? மேற்கொண்டிருந்தால் விவரங்கள் என்ன? மேற்கொள்ளவில்லை என்றால் காரணங்கள் என்ன?

கோயம்புத்தூர் மற்றும் பொள்ளாச்சி பகுதிகளில் பயணிகளின் சமமான வளர்ச்சியை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் என்ன? என்ற கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இதற்கு பதில் அளித்த ரயில்வே, தகவல் & ஒளிபரப்பு மற்றும் மின்னணு & தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் எழுத்து பூர்வமாக அளித்த பதிலில்,

இந்திய ரயில்வே முழுவதும் மண்டல மற்றும் பிரிவு எல்லைகள் மாற்றம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், சமூக நல அமைப்புகள், ரயில் பயனாளர்கள் போன்றோரிடமிருந்து அதிகாரப்பூர்வமாகவும், அதிகாரப்பூர்வமற்ற முறையிலும் பல்வேறு நிலைகளில் ரயில்வே வாரியம், மண்டல ரயில்வே, பிரிவு அலுவலகம் போன்ற இடங்களில் தொடர்ந்து மனுக்கள், கோரிக்கைகள், ஆலோசனைகள் பெறப்படுகின்றன.

இந்த மனுக்கள் தொடர்ச்சியாகவும், சீரற்ற முறையிலும் கிடைப்பதால் மையப்படுத்தப்பட்ட பட்டியல் பராமரிக்கப்படவில்லை. எனினும், அவை பரிசீலிக்கப்பட்டு பொருத்தமான மற்றும் சாத்தியமான நடவடிக்கைகள் தேவைக்கேற்ப எடுக்கப்படுகின்றன. இந்திய ரயில்வேயின் செயல்பாடுகள் மண்டலங்களாகவும் பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த பிரிவுகள் மாநிலங்கள் மற்றும் மாவட்ட எல்லைகளின் அடிப்படையில் பிரிக்கப்படவில்லை. அவை செயல்திறன், நிர்வாக தேவைகள். பொருளாதார மற்றும் செயல்திறன் காரணிகளின் அடிப்படையில் தான் பிரிக்கப்பட்டுள்ளது.

பாலக்காடு மண்டலம் தற்போது கிணத்துக்கடவு மற்றும் பொள்ளாச்சி உள்ளிட்ட தனது எல்லைக்குள் உள்ள பாதைகளின் தேவைகளை பூர்த்தி செய்து வருகிறது. தற்போதைய அமைப்பு திருப்திகரமாக செயல்பட்டு வருவதால் கிணத்துக்கடவு மற்றும் பொள்ளாச்சி ரயில் நிலையங்களை சேலம் மண்டலத்துக்கு மாற்றும் முன்மொழிவு சாத்தியமற்றதாகவே கருதப்படுகிறது என்று பதிலளித் துள்ளார்.

மேலும் அம்ரித் பாரத் ஸ்டேஷன் திட்டத்தின் கீழ் இந்தியாவில் உள்ள பல்வேறு ரயில் நிலையங்களை நீண்ட கால வளர்ச்சி நோக்கில் மேம்படுத்தபடுகிறது. ரயில்வே நிலையங்களில், லைய அணுகல் மற்றும் சுற்றுப்புற பகுதி மேம்படுத்தல், நகரின் இரு பக்கங்களுடனும் ஒருங்கிணைத்தல், நிலையக் கட்டிட மேம்பாடுத்துதல், காத்திருப்பு மையங்கள் கழிப்பறைகள், இருக்கைகள், குடிநீர் வசதி போன்ற பல வசதிகள் மேம்படுத்தப்படுவதாகவும், இந்தியாவில் இதுவரை 1,337 நிலையங்கள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இதில் 77 நிலையங்கள் தமிழ்நாட்டில், அதில் பொள்ளாச்சி, கோயம்புத்தூர், கோயம்புத்தூர் வடக்கு, போத்தனூர் போன்ற ரயில் நிலையங்களும் மேம்படுத்தபடுவதாக கூறினார்.

தமிழ்நாட்டில் ஏற்கனவே சிதம்பரம், குளித்துறை, மன்னார்குடி, போலூர், சமல்பட்டி, ஸ்ரீரங்கம், செயிண்ட் தாமஸ் மவுண்ட், திருவண்ணாமலை, விருத்தாச்சலம் போன்ற 9 ரயில் நிலையங்களில் இந்த பணி நிறைவு பெற்றுள்ளது என்பதை குறிப்பிட்டுள்ளார். மேலும் பொள்ளாச்சி ஜங்ஷன் புதிய நிலையக் கட்டிடம், மேடை கூரை, காத்திருப்பு மண்டபம், கழிப்பறை, முன்பதிவு அலுவலக மேம்பாடு, ஏசி காத்திருப்பு அறை, சுற்றுப்புற பகுதி, பார்க்கிங், VIP லவுஞ்ச், மாற்றுத்திறனாளி வசதிகள் அனைத்தும் முடிந்தது. இறுதி அலங்கார வேலைகள் நடைபெற்று வருகின்றன. என்றும் கோயம்புத்தூர் வடக்கு ரயில்வே நிலையத்தில் புதிய காத்திருப்பு மையம், மேடை கூரை, லிப்ட், பார்க்கிங் முடிந்தது. நிலையக் கட்டிடம் & சுற்றுப்புறம் மேம்படுத்தும் பணிகள் நடைபெறுகின்றன.

போத்தனூர் ஜங்ஷனில் காத்திருப்பு மையம் சுற்றுப்புறம், பார்க்கிங், புதிய ரிசர்வ் லவுஞ்ச், முன்பதிவு அலுவலகம், லிப்ட் ஆகியவை முடிந்தது. தளம் மேற்பரப்பு, மேடை கூரை, மேடை1 அகல விரிவாக்கம், 6 மீட்டர் மேம்பாலம் போன்ற பணி கள் நடைபெற்று வருகின்றன.

கோயம்புத்தூர் ஜங்ஷனில் மாஸ்டர் பிளானிங் நடைபெற்று வருகிறது. இது பல முறை திருத்தப்படும் செயல்முறை என்பதால் காலக்கெடுவை இப்போது அறிவிக்க முடியாது என்றும் தனது பதிலில் குறிப்பிட்டு கூறியுள்ளார்.

கடைசியாக நிலைய மேம்பாடு மறுவளர்ச்சி மேம்படுத்தல் என்றவை தொடர்ச்சியான செயல்முறைகள் தேவைக்கேற்ப முன்னுரிமை மற்றும் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் உயர்நிலை நிலையங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுத்தப்படுகிறது என்றார்.

---

### பவானி நகரக் கழகச் செயலாளர்

# ப.சீ.நாகராசன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச.10–

பவானி நகரக் கழகச் செயலாளர் ப.சி.நாகராசன் மறைவுக்கு, கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

பவானி நகரக் கழகச் செயலாளர் ப.சீ. நாகராசன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த வருத்தமுற்றேன்.

நாகராசன் அவர்கள் ஈரோடு மாவட்டக் கழகத்தினரின் அன்பையும் அபரிமிதமான மரியாதையையும் பெற்றிருந்த ஒப்பற்ற செயல்வீரர் ஆவார். கடந்த மாதம் நான் ஈரோடு மாவட்டத்துக்கு அரசு நலத்திட்ட விழாவில் பங்கேற்கச் சென்றிருந்தபோதும் மிகச் சிறப்பான வரவேற்பினை வழங்கியிருந்தார். நிகழ்ச்சிகளைப் பாங்குடன் ஒருங்கிணைப்பதில் ஆர்வத்துடன் செயல்படும் தளகர்த்தராகத் திகழ்ந்தவர் நாகராசன் அவர்கள்.

கால்நூற்றாண்டு காலம் பவானி நகரக் கழகச் செயலாளராகப் பணியாற்றிய நாகராசன் அவர்களுக்குச், சிறந்த நகரக் கழகச் செயலாளர் என்று விருது வழங்கியிருந்ததையும் நெகிழ்ச்சியோடு இவ்வேளையில் நினைவு கூர்கிறேன்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

---

### இன்று (டிச.10)

# மூதறிஞர் இராஜாஜி 147-வது பிறந்த நாள்!

## திருவுருவச் சிலைக்கு அமைச்சர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர்!

சென்னை, டிச. 10 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சார்பில், மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 147வது பிறந்த நாளான இன்று (10.12.2025) காலை 9.30 மணியளவில் அமைச்சர் பெருமக்கள், சென்னை பாரிமுனை, உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அவருடைய திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூருக்கு அருகிலுள்ள தொரப்பள்ளி கிராமத்தில், 10.12.1878 ஆம் ஆண்டு பிறந்தார். சட்டப் படிப்பை முடித்து வழக்கறிஞராகப் பணியாற்றி, பின், சேலம் நகராட்சி மன்றத் தலைவராக விளங்கினார். அப்பொழுது ஊதியமே வாங்காமல், தம் மக்கள் பணியைத் தொடர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்ணல் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தால் பெரிதும் ஈர்க்கப்பட்டு, தமிழ்நாட்டில் நடந்த உப்பு சத்தியாகிரகம் போராட்டத்தினை முன்னின்று நடத்தினார். இதனைத் தொடர்ந்து, 1937ஆம் ஆண்டு காங்கிரஸ் இயக்கத்தின் சார்பில் வெற்றி பெற்று, அன்றைய மதராஸ் மாகாணத்தின் முதலமைச்சரானார். தம் வாழ்நாளின் இறுதிவரையில் மதச்சார்பின்மையைக் கடைப்பிடித்தார். தமிழ்நாடு முதலமைச்சர், இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல், மேற்கு வங்க ஆளுநர், ஒன்றிய உள்துறை அமைச்சர் என நாட்டின் மிக உயர்ந்த பதவிகளை வகித்துள்ளார்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் மதுவிலக்குத் திட்டத்தினைச் செயல்படுத்தி, அதனால், அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடு செய்கின்ற வகையில், இந்தியாவிலேயே முதன்முறையாக விற்பனை வரி வசூலிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். ஒடுக்கப்பட்ட மக்களின் ஆலய நுழைவுக்கு உதவினார். விவசாயிகளின் கடன் சுமையைக் குறைத்திடும் வகையில் சட்டம் கொண்டு வந்தார். தீண்டாமை ஒழிப்பில் தீவிர கவனம் செலுத்தினார். கலப்புத் திருமணத்தினைத் தன் இல்லத்திலேயே நடைமுறைப்படுத்தினார்.

முதிர்ந்த அரசியல் ஞானமும், ஆழ்ந்த அனுபவமும் கொண்டிருந்த மூதறிஞர் இராஜாஜி அவர்களின் நேர்மையும், எளிமையும் மக்களிடம் சிறப்பான வரவேற்பைப் பெற்றவை.

இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பேற்று, அரசு மாளிகையை விட்டு வெளியேறிய பொழுது, தமக்கு அளிக்கப்பட்ட பரிசுப் பொருள்கள் அனைத்தையும் முறையாக அரசிடம் ஒப்படைத்துவிட்டுத் தமது கைத்தடியுடன் வெளியேறினார். விடுதலைப் போராட்டத்திலும், அரசு நிருவாகத்திலும் தமது அளப்பரிய பணிகளை ஆற்றிய போதிலும், இலக்கியத்தில் அவர் கொண்டிருந்த ஆர்வத்தின் காரணமாக அரிய பல நூல்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார்.

அவர் எழுதிய பல நூல்களில் ‘சக்கரவர்த்தித் திருமகன்’, ’வியாசர் விருந்து’ ஆகிய நூல்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவை. ‘சக்கரவர்த்தித் திருமகன்’ என்ற நூலுக்காக அவருக்கு 1958ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டுள்ளது.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் 1954 ஆம் ஆண்டு இந்தியத் திருநாட்டின் மிக உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டார். கிருஷ்ணகிரி மாவட்டம் தொரப்பள்ளியில் அவர் வாழ்ந்த வீடு அரசின் சார்பில் அரசுடைமையாக்கப்பட்டு நினைவில்லமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் உப்பு சத்தியாகிரகம் முதலான சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்று, பலமுறை சிறை சென்ற மகத்தான தியாகி என்பதால் அவருக்குச் சுதந்திரப் போராட்ட வெள்ளி விழாவின் போது, ஒன்றிய அரசு வழங்கிய தாமிரப் பட்டய விருதினை, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 3.10.1972 அன்று இராஜாஜி அவர்களின் இல்லம் சென்று அவருக்கு மலர்மாலை அணிவித்து வழங்கினார்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள், 25.12.1972 அன்று மறைந்தார். அவருடைய நினைவாக, 1973 டிசம்பர் 25 அன்று சிறப்பு அஞ்சல்தலை வெளியிடப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில், மூதறிஞர் அவர்களைப் போற்றும் வகையில் அவர் விரும்பும் கிரீடம் போலவே அவருடைய சிலையுடன் கூடிய நினைவாலயத்தை வடிவமைத்துக் கட்டி, விடுதலைப் போராட்ட தியாகி ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களைக் கொண்டு, 5.5.1975 அன்று திறந்து வைத்தார்கள்.

மூதறிஞர் இராஜாஜி அவர்களின் நூற்றாண்டு விழாவின்போது, சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில், 24.12.1978 அன்று அவருக்குச் சிலை நிறுவித் திறந்து வைக்கப்பட்டது. அவருடைய நினைவைப் போற்றுகின்ற வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் அவருடைய பிறந்த நாளான டிசம்பர் 10 ஆம் நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி, இந்த ஆண்டு டிசம்பர் 10ஆம் நாளன்று அமைச்சர் பெருமக்கள், சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள மூதறிஞர் இராஜாஜி அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்துகின்றனர். இந்நிகழ்ச்சியில், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி பிரநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

---

### அண்ணா அறிவாலயம் ஊழியர்

# தா. முரளிதரன் இளைய சகோதரர் தா.நாகேஸ்வரன் மறைவு!

## சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. – கழக முன்னணியினர் அஞ்சலி!

*சென்னை,டிச.10-*

*தி.மு.க. தலைமை அலுவலகம் அண்ணா அறிவாலயத்தில் பணிபுரியும் தா. முரளிதரன் அவர்களின் இளைய சகோதரர் தா. நாகேஸ்வரன் (வயது 61) அவர்கள் உடல்நிலை சரியில்லாமல் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று (09.12.2025) அதிகாலை 1.30 மணியளவில் மறைவெய்தினார்என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*



*நாகேஸ்வரன் அவர்கள் 1980 ஆம் ஆண்டு முதல் கழகத்தில் உறுப்பினராகச் சேர்ந்து தீவிர கழகப்பணி மேற்கொண்டவர். காஞ்சிபுரம் மாநகர் 34 வார்டில் கழகம் வளர்த்தவர்களில் முக்கியபங்காற்றியவர் ஆவார். காஞ்சிபுரம் முருகேசன் அவர்கள் காஞ்சிபுரம் தொகுதியில் போட்டியிட்ட போது அவரது வெற்றிக்காக தீவிர பணியாற்றியவர். அதே போன்று காஞ்சிபுரம் சட்டமன்றம்,நாடாளுமன்றத் தேர்தல்களில் கழகத்தின் வெற்றிக்காக அயராது பணியாற்றியவர்.*

*முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பால் மிகுந்த பற்று கொண்டவர் ஆவார்.*

*மேலும் காஞ்சிபுரம் கழக முன்னணி தலைவர்களுடன் நெருக்கமான தொடர்புடையவர். கழகம் அறிவிக்கும் அனைத்து போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டுள்ளார். சட்டமன்றம், நாடாளுமன்ற, உள்ளாட்சித் தேர்தல்களில் கழகம் அறிவிக்கும் வேட்பாளர்களின் வெற்றிக்காக தீவிரமாக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

*அப்பேற்பட்ட கழக செயல்வீரர் நாகேஸ்வரன் அவர்கள் உடல் நலம் குன்றி சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று (9.12.2025 - செவ்வாய்க்கிழமை) விடியற் காலை 1.30 மணியளவில் மறைவுற்றார்.*

*இவர் மறைவுச் இச்செய்தி அறிந்தவுடன், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுகுமார், மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் வி.எஸ். ராமகிருஷ்ணன், மாநில தொண்டர் அணித் தலைவர் ஜி. சுகுமார், மாநகரச் செயலாளர் தமிழ்ச் செல்வன், மாநகர அவைத் தலைவர் கே.ஏ. செங்குட்டுவன், மாநகர் மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், பகுதிச் செயலாளர்கள் எஸ். சந்துரு, கே. திலகர், அ. தசரதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் யுவராஜ், சன்பிராண்ட் ஆறுமுகம், மாமன்ற உறுப்பினர் சுரேஷ், 34வது வட்டச் செயலாளர் ஸ்ரீபாலு, இளைஞர் அணி அருண் மற்றும் கழக முன்னணியினர், கழக உடன்பிறப்புகள் நேரில் சென்று அவரது உடலுக்கு மரியாதை செலுத்தினார்கள்.*



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் காணொளி காட்சி வாயிலாக நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் நிர்வாகிகள் பங்கேற்றதை தொடர்ந்து மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், தணிக்கைக் குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, வடக்கு தொகுதி பொறுப்பாளர் கம்பம் செல்வேந்திரன், மாநில தீர்மானக் குழு செயலாளர் அக்ரி கணேசன், ஜெயராம், வி.பி.ராசன், தேனி ஜெயக்குமார் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். மேலும் இக்கூட்டத்தில் ஒச்சுபாலு, மூவேந்திரன், சின்னம்மாள், ராகவன், முருகவேல், சௌந்தர்ராஜன், ஏ.கே.ஆறுமுகம், வைகை பரமன், முத்து கணேசன், பி.டி.மணிமாறன், விஜயலட்சுமி பாண்டியன், செய்யது அபுதாகிர் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியத்தில் 55 சத்துணவு மையங்களுக்கு எரிவாயு அடுப்புகளை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்ரமணியன், பி.டி.ஓ. ஜெய்சங்கர் ஆகியோர் உள்ளனர்.